பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மலர் 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 12 வெள்ளிக்கிழமை (28 08 1992) UTHAYAN — A Lively National Tamil Daily இதழ் 274

## முன்னேறும் முயற்சி முறியடிப்பு

# மாதகல் பகுதியில் மோதல்

# படையினர் தரப்பில் பேரிழப்பு

## போராளிகள் எண்மர் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஆகஸ்ட் 28

மாதகல் பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்காப் படையினர் நேற்றுக் காலை 6.30 மணியளவில் சில்லாலைப் பக்கமாக முன்னேற முயன்றனர் என்றும், அவ்வேளை விடுதலைப் புலிகள் படையினரின் முன்னேற்றத்தைத் தடுத்து முறியடித்தனர் என்றும் அறியவந்தது.

இந்த மோதலின் போது படையினருக்கு பேரிழப்பு ஏற்பட்டதாகவும், அதே சமயம் விடுதலைப் புலிகள் தரப்பில் எண்மர் வீரமரணமடைந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாதகல் காடாப்புலம் ஆஸ்பத்திரி, யானைவெட்டி அம்மன் கோவில் பகுதிகளில் நிலைகொண்டுள்ள படையினரே வயல்வெளியூடாக முன்னேற முயன்றனர் என்றும்—

அவர்கள் தமது முன்னேறும் முயற்சியின்போது குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதல்களையும், கடற்பரப்பில் இருந்து பீரங்கித் தாக்குதல்களையும் நடத்தினர் என்றும்—

இதனால் வடலியடைப்பு, சில்லாலைப் பகுதிகளிலுள்ள பல வீடுகள் சேதமடைந்தன என்றும் அறியவந்தது.

விடுதலைப் புலிகள் நடத்திய கடும் எதிர்த்தாக்குதலால் படையினர் தமது முன்னேறும் முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினர்.

இதேவேளை, மாதகலில் இடம்பெற்ற மோதலில் இரு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## எதிர்க்கட்சிகள் ஆர்ப்பாட்ட பேரணி

ஜனாதிபதி பிரேமதாஸ மீது குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்ட முதலாவது ஆண்டு நிறைவை முன்விட்டு எதிர்க்கட்சிகள் இன்று ஆர்ப்பாட்ட பேரணி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்துள்ளன.

மேற்படி குற்றப் பிரேரணை நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட சபாநாயகர் அனுமதி மறுத்தது தெரிந்ததே.

## இந்தியப் படை விமானம் வெடித்துச் சிதறியது!

### இன்ஸ்பெக்டர் ஜெனரல் பலி

புதுடில்லி, ஆக. 28

புதுடில்லி விமான நிலையத்தில் நேற்று இடம்பெற்ற விமான விபத்து ஒன்றில் இந்திய எல்லைப் பாதுகாப்புப் படையின் விமானப் போக்குவரத்து பிரிவுத் தலைவரான இன்ஸ்பெக்டர் ஜெனரல் நஜ்வால் என்பவர் கொல்லப்பட்டார்.

விபத்துக்குள்ளான விமானத்தை அவரே செலுத்தியதாகவும், விமானத்தில் வேறு எவரும் இருக்கவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டது.

விமானம் ஓடுபாதையில் இருந்து கிளம்பி மேலெழுந்தகையோடு வெடித்துத் தீப்பிழம்பாக சிதறியது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்துக்கான காரணம் பற்றிக் கருத்துத் தெரிவிக்க அதிகாரிகள் மறுத்து விட்டனர். [ஓ-10]

## பலாலி முகாம் கைதிகள் சிலர் களுத்துறைக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஆக. 28

பலாலியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சிலர் களுத்துறையிலுள்ள தடுப்பு முகாமுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

பலாலிக்கு விஜயம் செய்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள், நேற்று இந்த விடயத்தை அவர்களது உறவினர்களிடம் தெரிவித்தனர்.

இத்தகவலைப் பெற்ற உறவினர்கள் பலர் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகரைச் சந்தித்து சம்பந்தப்பட்டவர்களை விடுதலை செய்ய உதவுமாறு கோரிக்கை விடுத்தனர்.

அடுத்த முறை கொழும்பு செல்லும் போது இந்த விடயம் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவதாக அரச அதிபர் தெரிவித்தார். [ஓ-3]

## 'ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி' 2 ஆம் கட்டம் விரைவிலாம்

கொழும்பு, ஆக. 28

யாழ். மாவட்டத்தில் 'ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி' இராணுவ நடவடிக்கையின் இரண்டாவது கட்டம் விரைவில் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கான ஏற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்படுவதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தனது சர்வதேச ஒலிபரப்பில் தெரிவித்தது.

இரண்டாம் கட்ட நடவடிக்கைகள் எந்தத் திசையில் இருந்து ஆரம்பமாகும் என்று இன்னும் அந்த வட்டாரங்கள் தெரிவிக்கவில்லை என்றும் அச்செய்தியில் மேலும் கூறப்பட்டது. [ஓ-எ]

## ராமேஸ்வரத்தில் மூவர் கைது

சென்னை, ஆக. 28

இராமேஸ்வரத்தில் நடந்த புதனன்று மூன்று பேரை விசேட பொலிஸார் கைது செய்தனர். கணிசமான அளவு வெடிப் பொருள்களை அவர்களிடம் இருந்து பொலீஸார் பறிமுதல் செய்தனர்.

கைது செய்யப்பட்ட மூவரில் இருவர். இலங்கைத் தமிழ்த் தீவிரவாதிகளுக்கு வெடி மருந்து விற்றதாகத் தகவல் கிடைத்ததன் பேரில் கைது செய்யப்பட்டனர் என்று பொலீஸார் தெரிவித்தனர். [ஓ-எ]

## புலிகள் மீதான தடை: விசாரணை ஒத்திவைப்பு

புதுடில்லி, ஆக. 28

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது இந்தியா விதித்துள்ள தடை தொடர்பான மனுவை விசாரிப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட புதுடில்லி விசேட நீதிமன்றம் தனது விசாரணையை ஒத்திப் போட்டிருக்கிறது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சார்பில் சட்டதரணிகள் எவரும் ஆஜராகாததன் காரணமாகவே விசாரணை ஒத்திப் போடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விசேட நீதிமன்றம் இம் மாதம் 12 ஆம் திகதி கூடியபோது விடுதலைப் புலிகளின் சர்வதேசச் செயற்குழு, திரு லோறன்ஸ் திலகரின் பெயரில் மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்ததும்—

கௌதம் என்பவர் திலகர் சார்பாக மனுவைத் தாக்கல் செய்ததும் தெரிந்தவையே.

திலகரின் மனுவை வழக்குக் கோட்டில் வைக்க நீதிபதி பி. என். நாஹ் ஏற்றுக்கொண்டு

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தம்பலகமத்தின் ஒரு பகுதி முஸ்லிம்களால் ஆக்கிரமிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 28

திருகோணமலை மாவட்டம் தம்பலகமத்தின் ஓர் பகுதி முற்றாக முஸ்லிம்களின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் ஆபத்து ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

தம்பலகமத்தில் வாழ்ந்த தமிழர்கள் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டுள்ள நிலையில் முஸ்லிம்களினதும் சிங்களவர்களினதும் ஆதிக்கம் அங்கு வலுப்பெற்று வருவதாகவும்—

தம்பலகமத்தின் ஒரு பகுதியில் முஸ்லிம்களின் அத்துமீறிய குடியேற்றங்கள் அதிகரிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து அங்கு முஸ்லிம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்

### யாழ். தளபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஆக. 28

''யாழ். குடாநாடு மீதான இராணுவ நடவடிக்கையின் போது பொதுமக்கள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.''

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி திரு. ஜென். பிராங்கோயி சங்சு யாழ். மாவட்ட இராணுவத் தளபதி பிரிகேடியர் தலுவத்தையிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பலாலிக்குச் சென்ற அவர் புதிதாக யாழ். மாவட்ட தளபதியாகப் பொறுப்பேற்றுள்ள பிரிகேடியர் தலுவத்தையுடன் யாழ். மாவட்ட நிலைமை குறித்துப் பேச்சுக்கள் நடத்தினார்.

யா. மாவட்டத்தில் உள்ள மக்களின் அச்சத்தையும், அவர்களது இக்கட்டான நிலைமை குறித்தும் பிரிகேடியரிடம் தெரிவிக்கப்பட்டது என்றும்—

இராணுவ நடவடிக்கைகளின் போது பொதுமக்களின் பாதிப்பை தவிர்க்கும் வகையில் அவர்களது பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என்றும் பிரிகேடியரிடம் [illegible]

[6 ஆம் பக்கம் பார்க்க]

## நேர் உச்சியில் சூரியன்!

கொழும்பு, ஆக. 28

சூரியன் தென் கோளத்தை நோக்கிய பயணத்தில் இன்று வெள்ளி நண்பகல்— சரியாக 12.12க்கு யாழ்ப்பாணத்துக்கு நேர் உச்சியில் வருகிறது. [ஓ-10]

## தமிழக ஆளுநர் டில்லி விஜயம்

சென்னை, ஆக. 28

தமிழ்நாடு ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் நேற்று சென்னையில் இருந்து புதுடில்லிக்கு பயணமானார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழக அரசியல் நிலைமை சூடு பிடித்துள்ள இவ்வேளையில் ஆளுநரின் புதுடில்லி விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. [ஓ-எ]

## 3, 200 மெ. தொன் மா 'குமாரி' கப்பலில் வருகிறது

திருகோணமலை பிறிமா ஆலையில் இருந்து மூவாயிரத்து 200 மெற்றிக்தொன் மாவை ஏற்றிக்கொண்டு 'குமாரி' கப்பல் எதிர்வரும் 31 ஆம் திகதி பருத்தித் துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் அகதிகளுக்கு நிவாரணமாக விநியோகிக்கப்படும் மாவின் தேவை அதிகரித்திருப்பதை சுட்டிக்காட்டி திருமலையிலிருந்து மேற்படி கப்பல் மூலம் மேலதிகமாக மாவை ஏற்றிவர ஏற்பாடு செய்யுமாறு யாழ். அரச அதிபர் திரு கே. மாணிக்கவாசகர் அத்தியாவசிய சேவைகள் நாயகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார்.

அதனை அடுத்து திருமலை சென்று மாவை ஏற்றிவர அனுமதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து 'குமாரி' கப்பல் பருத்தித்துறையில் இருந்து தற்சமயம் திருமலை சென்றுள்ளது. [ஓ-3-5]

**நீரைச் சேமிப்போம்**
**ஊரைச் செழிக்க வைப்போம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிவாரணம் கிடைக்கவில்லை; இடம்பெயர்ந்தவர்கள் புகார்

யாழ்ப்பாணம், ஆக. 28

வலி-வடக்கு, வலி-மேற்கு பகுதிகளில் கடந்த 20, 21ஆம் திகதிகளில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது இடம்பெயர்ந்த அகதிகள், மற்றும் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ளவர்களுக்கு நிவாரணம் எதுவும் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகிறது.

உடுவில், சண்டிலிப்பாய், சங்கானைப் பகுதியில் இவர்கள் தங்கியுள்ளனர்.

தாம் இடம்பெயர்ந்து ஒரு வாரமாகியும் நிவாரணம் வழங்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று அவர்கள் கூறினர்.

இதற்கிடையில் —

அந்தப் பகுதி கிராமசேவையாளர்கள் அவர்களின் விவரங்களைச் சேகரித்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. [ஓ-3]


## உடன் தேவை

பத்து (10) கே. வி., சிங்கிள் பேஸ் ஜெனரேற்றர் ஒன்று உடன் வாடகைக்குத் தேவை: க. முத்துக்குமாரசாமி, 430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(C/3090)


## செஞ்சோலை இசைமாலை

யாழ்ப்பாணம், ஆக. 28

கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நாளை சனிக்கிழமை இரவு 7 30 மணிக்கு செஞ்சோலை இசைமாலை நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. [ஓ]


## JAFFNA COLLEGE, VADDUKODDAI

### English Medium Classes

### G.C.E. Advanced Level (A E B)

Subjects taught: Pure Mathematics
Applied Mathematics
Physics & Chemistry.

Classes begin on 02 - 09 - 1992

PRINCIPAL.

Vaddukoddai. (C - 3092)


## வடமராட்சிக் கல்விக் கோட்டம்

ஆண்டு 6 முதல் மேல்வகுப்புகள் உள்ள சகல பாடசாலை அதிபர்களுக்கான

## அறிவிப்பு

கல்விக் கோட்ட ரீதியாக மரம் நடுகை சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் வடமராட்சி கல்விக் கோட்டப் பணிமனையில் (வேலாயுதம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை) நாளை 29 - 08 - 1992 சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் மேற்படி சகல அதிபர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பணிவன்புடன் அழைக்கின்றோம்.

இணைப்பாளர்
தமிழர் புனர்வாழ்வுக் கழகம்
வடமராட்சி

[சி/3003]

## தமிழ் மாமன்றம் நடாத்தும் பரிசளிப்பு விழா

நல்லைக் கந்தன் உற்சவத்தின் போது எமது மன்றத்தால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா 29- 08- 92 சனிக்கிழமை பி. ப. 4. 00 மணிக்கு நல்லை ஆதீன கலாமண்டபத்தில் நடைபெறும். போட்டி முடிவுகள் அன்றைய தினமே வெளியிடப்படும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பொதுச் செயலாளர்
தமிழ் மா மன்றம்

[22331]


## பாடசாலை பஸ் சேவை

எம். ஆர். கே. எஸ். ஸ்தாபனத்தார் தென்மராட்சி பாடசாலை மாணவர்களின் நலன் கருதி 01-09-92 முதல் யாழ். நகரிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்குமான விசேட பஸ் சேவையை நடாத்தவுள்ளனர்.

★ ஒரு குடும்பத்திலிருந்து இரண்டுக்கு மேற்பட்ட மாணவர்கள் பிரயாணம் செய்தால் விசேட சலுகைகள் வழங்கப்படும்.

★ மாதாந்த கட்டண அடிப்படையில் நடைபெறும்.

★ சென்று வருவதற்கான கட்டண விபரம்:

12 வயதிற்கு குறைந்தவர்களுக்கு ரூபா 20-00
12 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு ரூபா 25-00

மேலதிக தொடர்பு:-

மினிபஸ் ஒன்றியம்,
பஸ் நிலையம்,
சாவகச்சேரி.

[C/3091]


## நல்லூரில் இன்று

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தின் 26 ஆம் திருவிழாவான இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு பூங்காவனம் திருவிழா நடைபெறும்.

இன்று ஆலயச் சுற்றாடலில் நடைபெறவுள்ள நிகழ்ச்சிகள் வருமாறு:-

★ மேற்கு வீதியில் பிள்ளையார் ஆலய முன்றலில் (மாலையில்) — கானகதாவாரிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா நிகழ்த்தும் "ஸ்ரீ வள்ளி திருமணம்" என்ற பொருளில் கந்தபுராண கதாப்பிரசங்கம்.

★ நல்லை ஆதீனத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு — கந்தபுராணப் படிப்பு. பிற்பகல் 3.00 மணிக்கு -பௌராணிகர் மு. தியாகராசாவின் "முருக இலக்கியங்கள்" தொடர் விரிவுரை.

★ நல்லூர் கிழக்கு வாசல் முருகன் தண்ணீர்ப்பந்தலில் திரு. பொன் - சுந்தரலிங்கத்தின் இன்னிசைக் கச்சேரி.

★ யாழோசையின் ஆதரவில் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் மாலை 6.35 மணிதொடக்கம்—

யாழோசைக் குழுவினருடன் யாழ். முன்னணி இளம் கலைஞர்கள் இணைந்து வழங்கும் "நிவேதனம்" இசை நிகழ்ச்சி [இ-30]

## இன்றைய ஆட்டங்கள்

மல்லாகம் ஸ்ரீ முருகன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடத்தும் 7 பேர் கொண்ட உதைபந்தாட்டப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ சென். மேரிஸ் "பி" எதிர் பாடும் மீன் "ஏ"

★ அராலி அண்ணா எதிர் விக்னேஸ்வரா

★ ★ ★

யாழ். மடம் வீதி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தின் முன்னாள் பொருளாளர் அமரர் சிற்றம்பலம் பஞ்சலிங்கம் நினைவாக நடத்தப்படும் 7 பேர் கொண்ட உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று யாழ். பரியோவான் கல்லூரியில் இடம்பெறும் அரை இறுதி ஆட்டங்களின் விவரம் வருமாறு:

★ யங்றோயல் வி. க. அணி எதிர் பாரதி வி. க. அணி.

★ சென். நீக்கிலாஸ் அணி எதிர் சென். மேரிஸ் வி. க. அணி. [த-51]

## கருத்தரங்கு

இறைமக்கள் பயிற்சி நிலையம் ஏற்பாடு செய்துள்ள இறைமக்கள் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு பரி.யோவான் ஆலய மண்டபத்தில் நடைபெறும். "ஓய்வு நாள் பள்ளிக்கூட ஆசிரியராதல்" என்ற பொருளில் கருத்தரங்கு இடம்பெறும். [த]

## நாகநாதன் நினைவு நாள்

ஈ. எம். வி. நாகநாதன் நினைவு நாள் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அரியாலை ஆனந்தா வித்தியாலயத்தில் நடைபெறும். [இ]


## Science Academy

Nallur

### O/L கணிதம் Paper - Class

ஆரம்பம்:- 29 08 92
4 மணி

திரு. சதீஸ்

குறிப்பு:- மாதிரிவினாத் தாள் இலவசம்.

(C/3221)


# செல்வச்சந்நிதி ஆலய உற்சவம் இன்று ஆரம்பம்

பிரசித்திபெற்ற தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் இன்று காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

உற்சவத்தில் 5 ஆம் திருவிழாவில் இருந்து காலைத் திருவிழா நடைபெறும்; என்றும் —

இரவுத் திருவிழாக்கள் மாலை 6 மணியுடன் பூர்த்தியாகும் என்றும் — அறிவிக்கப்படுகிறது.

அடுத்த மாதம் 5ம் திகதி பகல் 10 மணிக்கு பூங்காவனமும், 10 ஆம் திகதி மாலையில் சப்பறமும், 11 ஆம் திகதி காலையில் தேரும், 12 ஆம் திகதி காலையில் தீர்த்தமும், மாலையில் மௌனத் திருவிழாவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

[த-3-165-162]

# துர்க்கை அம்மன் உற்சவம் நாளை ஆரம்பமாகின்றது

பிரசித்திபெற்ற தெல்லிப்பழை துர்க்கையம்மன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் நாளை காலை 11.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

தொடர்ந்து 12 தினங்கள் உற்சவத்தை பக்திபூர்வமாக நடாத்த ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் 6 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 7 ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 8 ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 9 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கோவில் முன்பாக அமைந்துள்ள பெருந்தெரு வாசலில் வாகனத்தை நிறுத்துவதும், வீதி ஓரங்களில் வியாபார நிலையங்களை நிறுவுவதும் தடை செய்யப்பட்டுள்ளது என்றும்—

பெண்களும், குழந்தைகளும் நகைகள் அணிந்து வருவதை கூடியளவு தவிர்க்க வேண்டும் என்றும்—

சைவத் தமிழ் பண்பாட்டுக்கு முரணாக உடைகள் அணிந்து வருவதை தவிர்க்க வேண்டும் என்றும்— ஆலய நிர்வாகம் கேட்டுள்ளது.

கோவில் தரிசனம் முடிந்ததும் பக்தர்கள் தத்தமது வீடுகளுக்கு திரும்பவேண்டும் என்றும்—

இரவு நேரங்களில் எவரும் வீதிகளில் தங்குவதோ, பொழுது போக்குவதோ தவிர்க்கப்படவேண்டும் என்றும்— அறிவிக்கப்படுகிறது.

உற்சவ காலங்களில் சாரணர், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படை தொண்டர்கள் கடமை புரிவர்.

சுகாதார மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளை வலி. வடக்கு உதவி அரச அதிபரும், பிரதேச சபையினரும் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

[த-68-100-152]

## மென்பான பயிற்சி கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 28

மென்பானங்கள், பழரசங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்பட வேண்டிய தொழில்நுட்ப முறைகளும், கடைப்பிடிக்கப்பட வேண்டிய சுகாதார ஒழுங்குகளும் பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு சங்கிலியன் வீதியில் அமைந்துள்ள யாழ். மாநகர சபை நூல் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இக் கருத்தரங்கில் உள்ளூர் மென்பான தயாரிப்பாளர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்கப் பட்டுள்ளனர். [இ]

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ். கிளை, தலைமையகம்

## பிரிவு வருடாந்தப் பொதுக் கூட்டம்.

### நடைபெறும் இடங்கள்

எதிர்வரும் (30-08-92) நாளை மறுதினம் காலை 9. 30 மணிக்கு கீழே குறிப்பிடப்பட்ட இடங்களில் அந்தந்தப் பிரிவிற்குரிய தேர்தல்கள் நடைபெறும்.

| | |
|---|---|
| 01. கரவெட்டி | — கரவெட்டிப் பிரிவுக் காரியாலயம். |
| 02. பருத்தித்துறை | — வட. இந்து மகளிர் கல்லூரி, பருத்தித்துறை. |
| 03. மருதங்கேணி | — யாழ். செம்பியன்பற்று றோ. க. த. க. பாடசாலை. |
| 04. ஊர்காவற்றுறை | — ஊர்காவற்றுறைப் பிரிவுக் காரியாலயம், தற்காலிகம். |
| 05. வேலணை | — வேலணைப் பிரிவுக் காரியாலயம். உயரப்புலம் வீதி, ஆனைக்கோட்டை. |
| 06. நெடுந்தீவு | — சென்ஜோன்ஸ் அக்கடமி, தனியார் பாடசாலை. |
| 07. யாழ்ப்பாணம் | — யாழ். புனித சாள்ஸ் மகா வித்தியாலயம். |
| 08. நல்லூர் | — யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி, பாடசாலை. |
| 09. சாவகச்சேரி | — சாவகச்சேரி றிபேக் கல்லூரி. |
| 10. சண்டிலிப்பாய் | — மானிப்பாய் சோதி வேம்படி த. க. பாடசாலை. |
| 11. தெல்லிப்பளை | — மல்லாகம் மகா வித்தியாலயம். |
| 12. உடுவில் | — சைவ மகாஜன கல்லூரி. |
| 13. கோப்பாய் | — நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி. |
| 14. சங்கானை | — திருஞானசம்பந்தர் வித்தியாசாலை. |

மேற்படி கூட்ட அறிவித்தல் நிகழ்ச்சி நிரலுடன் அங்கத்தவர்களுக்கு தனித்தனியே அவ் அவ் செயலாளர்களால் அனுப்பப்பட்டுள்ளது. ஆயினும் தற்போதைய சூழ்நிலையில் குறித்த அறிவித்தல் இடைக்காவிடினும், இவ் அறிவித்தலை அங்கத்தவர்களும் ஏற்று பிரிவு, வருடாந்தக் கூட்டத்திற்கு தவறாது சமுகம் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்
ச. த. கணநாதன்
தலைவருக்காக (இடைக்கால நிர்வாகம்)

(சி/3094)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்டத்திலிருந்து

# இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் மீண்டும் பழைய இடங்களுக்கு

கொழும்பு, ஆக. 28

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து பிற மாகாணங்களில் உள்ள பாடசாலைகளில் தற்காலிகமாக பணிபுரிந்து வரும் தமிழர்களான ஆசிரியர்களை எதிர்வரும் செப்டெம்பர் 15ஆம் திகதிக்கு முன்னர் மீண்டும் அவர்களுடைய பழைய பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கும்படி கோரும் சுற்றுநிருபம் ஒன்றை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எம்.ஏ.சி. முகைதீன் வடக்கு - கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாணக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

ஆகஸ்ட் 17ஆம் திகதியிடப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள இச் சுற்று நிருபத்தின் பிரகாரம், தமது பழைய இடங்களுக்கு, திரும்பிச் செல்லாதிருக்கும் ஆசிரியர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்று அவர்களுக்கு அறிவுறுத்துமாறும் கோரப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் ஆசிரியர்களுக்கு பெரும் பற்றாக்குறை நிலவுவதாலேயே மாகாணக் கல்வி அமைச்சு இந்தச் சுற்றுநிருபத்தை அனுப்பியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் ஆசிரியர்கள் குறித்து அரசின் உத்தரவு வரும் வரை காத்திருக்கும் படி மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் வடக்கு - கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளரினால் கோரப்பட்டுள்ளனர்.

[த-எ]

## இன்று இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்

கொழும்பு, ஆக. 28

இலங்கை அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்குமிடையில் இரண்டாவது 5 நாள் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது. கொழும்பு கேத்தாராம விளையாட்டரங்கில் நடைபெறும் இப்போட்டி தினமும் காலை 10 மணிக்கு ஆட்டம் ஆரம்பமாகும். திங்கட்கிழமை ஓய்வு நாளாகும்.

[த-10]

ஈழத்தமிழ் அகதிகள் விவகாரம்:

## குற்றச்சாட்டுக்களை மறுத்து மாநில அரசு பதில் மனு

சென்னை, ஆக. 28

தமிழகத்தில் இருந்து இலங்கைத் தமிழ் அகதிகள் கட்டாயமாகத் திருப்பி அனுப்பப்படுகின்றார்கள் என்ற குற்றச்சாட்டை மாநில அரசு மறுத்துள்ளது.

சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பதில் மனு ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்தும்படி மாநில அரசுக்கு உத்தரவிடும்படி கோரி பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராம்தாஸ் தமிழ் தேசியக் கட்சித் தலைவர் திரு. பி. நெடுமாறன் ஆகியோர் தாக்கல் செய்த ரிட் மனுக்களுக்கு பதிலளிக்கு முகமாக மாநில அரசு இப்பதில் மனுவைத் தாக்கல் செய்து உள்ளது.

அகதிகளுக்கான ஐ. நா. தூதரக அதிகாரிகள் அகதிகளை நேரில் சந்தித்து அவர்கள் தாமாகவே தாயகம் திரும்புகிறார்கள் என்பது குறித்து திருப்தி அடைந்துள்ளார்கள் என்றும் மாநில அரசின் பதில் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதை நிறுத்தும்படி மாநில அரசுக்கு உத்தரவிடும்படி கோரி ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கை அகதிகளை அனுப்பும் நடவடிக்கை இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது தெரிந்ததே.

[இ-எ]

## அகதிகளுக்கு சமைத்த உணவு

உடுவில், ஆக. 28

சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை, மானிப்பாய் சோதி வேம்படி பாடசாலை, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் தங்கி உள்ள சுமார் ஐநூறு இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு சமைத்த உணவுகளை மானிப்பாய் சாயி சமித்திசேவா சங்கத்தினர் வழங்கினர்.

[ஒ-152]

## விவசாய உபகரணங்கள் எடுத்து வருவதற்கு அனுமதி

கொழும்பு, ஆக. 28

பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கு விவசாய உபகரணங்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் தில்லைநடராசா இவ்வாறு தெரிவித்தார் என்று கொழும்பு பத்திரிகை செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்வெட்டிகள், நீரிறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவிகளை விவசாய விஸ்தரிப்பு சேவைப்பணிப்பாளர் அல்லது கமத்தொழில் சேவை உதவிப்பணிப்பாளர் ஆகியோரின் சிபார்சுடன் வவுனியாவில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் இதற்கான அனுமதியைப் பெற்று எடுத்துச் செல்லமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

[த-எ]

## இந்துநாகரிக பாடத்திற்கு தோற்றிய மாணவர் பாதிப்பு

அண்மையில் நடந்து முடிந்த ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் இந்துநாகரிகப் பாடத்திற்குத் தோற்றிய மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்துநாகரிக பாடத்தில் கேட்கப்பட்ட வினாக்கள் பல இந்துசமய பாடத்திற்குரியவை என்றும் —

பகுதி ஒன்றிற்கான வினாக்கள் பகுதி இரண்டிலும், பகுதி இரண்டிற்குரிய வினாக்கள் பகுதி ஒன்றிலும் கேட்கப்பட்டிருந்தனவாம். [த]

## கடற்படைப் படகுகளில் பயணம் செய்யலாமாம்!

கொழும்பு, ஆக. 28

வடபகுதி மக்கள் விரும்பினால் இலவசமாக கடற்படைப் படகுகளில் திருகோணமலை, கொழும்பு மற்றும் பகுதிகளுக்கு சென்று தொழில் செய்து வாழலாம்.

இவ்வாறு கூட்டுப்படைகள் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தெரிவித்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் படகுகளில் கடற் பயணம் செய்வது நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

[த-எ]

## இந்திய வம்சாவளியினருக்கு அடையாள அட்டைகள்

இலங்கை பிரசா உரிமை பெற்றுள்ள இந்திய வம்சாவளி மக்களில் பதினெட்டு வயதுக்கு மேற்பட்டோருக்கு ஆட்பதிவுச் சட்டத்தின் கீழ் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

பிரதமர் டி. பி விஜேதுங்கா தலைமையிலான அமைச்சரவை உபகுழு இதற்கான தீர்மானம் ஒன்றை எடுத்திருக்கிறது.

மலையக மக்களின் பிரச்சினைகள் பற்றி அமைச்சர் தொண்டமான் அண்மையில் அமைச்சரவை உபகுழுவைச் சந்தித்து விளக்கியிருந்தார்.

[த-எ]

ஜிப்றி ஜுனூஸ் தாக்குதல் சம்பவம்:

## விடுதலை செய்யப்பட்டவர் மீண்டும் கைதானார்!

கொழும்பு, ஆக. 28

'அத்த' பத்திரிகையின் கேலிச் சித்திரக்காரரான ஜிப்றி ஜுனூஸைத் தாக்கிய சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்ட சந்தேக நபர் ஒருவர் கடந்த புதன்கிழமை கொழும்பு பிரதம நீதிவான் நீதிமன்ற வளவினுள் வைத்து மீண்டும் கைது செய்யப்பட்டார்.

அவர் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

[த-எ]

## இரண்டு கிளைகள் திறப்பு!

கொழும்பு, ஆக. 28

மனித உரிமைகள் பேணும் பணியகத்தின் மேலும் இரண்டு கிளைகள் அனுராதபுரத்திலும், வவுனியாவிலும் விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளன.

(த-எ)


உ

## திருமணத் திருமுகம்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஆங்கிரச வருஷம் ஆவணி மாதம் 14ஆம் நாள் (30 - 08 - 1992) ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிமுதல் 9-30 மணிவரை வரும் சுபமுகூர்த்த வேளையில்.

எமது சிரேஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**புவிச்சந்திரன்**
அவர்களுக்கும்
[உரிமையாளர்; வீனஸ் தங்க மாளிகை, யாழ்ப்பாணம்]

எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
**வித்யா**
அவர்களுக்கும்

நீர்வேலி, கந்தசுவாமி ஆலய மண்டபத்தில்
திருவருள் துணைகொண்டு இனிது நிகழவிருக்கும் திருமாங்கல்யதாரண வைபவத்தில் தாங்களும் குடும்ப சமேதரராய் வருகை தந்து, மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்:

இ. சடாட்சரம் தம்பதிகள்,
மாசிவன்,
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

சி. பொன்னுச்சாமி தம்பதிகள்,
திருமதி ருக்மணி - ஆனந்தவேல்,
நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

[82329]



உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் எழில் வருஷமாம் ஆங்கிரச ஆண்டின் இனிய ஆவணித் திங்கள் 14ஆம் நாளில் [30-08-1992] ஞாயிற்றுக்கிழமை காலை 7-21 மணியில் இருந்து 9-01 வரை வரும் கன்னி லக்கின சுப முகூர்த்த வேளையில்,

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**செ. மனோகரன்**
அவர்கள்

எமது ஏக புத்திரி
திருநிறை செல்வி
**க. பவானி**
அவர்கள்

ஆகிய இருவர் கரங்களும் சுற்றத்தார் வாழ்த்திட உயர்ந்தோர் ஏத்திட, கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் இறைவன் அருளால் இனிதே இணைய இருப்பதால் உற்றார், உறவினர் அனைவரும் வருகை தந்து, மணமக்களை மென்மலர் தூவி மனதார வாழ்த்த அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை விரும்பும் ★

திரு திருமதி செல்வரெத்தினம் - குடும்பத்தினரும்,
புளியங்கூடல் வடக்கு,
ஊர்காவற்றுறை.

திரு. திருமதி கனகரெத்தினம் (பாலு), குடும்பத்தினரும்
சில்லாலை,
பண்டத்தரிப்பு.

தற்காலிக முகவரி:
இல. 23, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

தற்காலிக முகவரி:
இல. 23, பிரம்படி ஒழுங்கை,
கொக்குவில்.

★ இது வீட்டார் அழைப்பு ★

[6278]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனையாகிறது

நாடறிந்த எழுத்தாளர் நாவேந்தன் எழுதிய மான வீரன் கும்பகர்ணன். ஜி சீ.ஈ., ஜி ஏ.கியூ. பட்டப் படிப்பினருக்குப் பெரும் பயனளிக்கும் எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [22297]

## புலமைப்பரிசில் பரீட்சை

23 - 08 - 1992 அரசாங்கத்தால்நடத்தப்பட்ட ஆண்டு -5 [புலமைப் பரிசில்] பரீட்சை வினாத்தாள்கள் - விடைகளுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். Bond Institutes, 58 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3162]

## வெளிவந்துவிட்டது

சைவாலயக் கிரியைகள் உயர் கல்வி பதிப்பக O/L கடந்த கால வினா - விடை. சைவத் திருக்கோயிற் கிரியை நெறி கைலாசநாதக்குருக்கள். விவேகானந்தர். சிறுவர் கதைகள். திருக்குறள். இந்திய தத்துவ ஞானம். அர்த்தமுள்ள இந்துமதம். ஸ்ரீ லங்கா புத்தகசாலை, 234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [22298]

## புவியியல் A/L

படவேலை [1:50,000] நிலவுருவங்கள், கால நிலையியல், தேசப் படத் தொகுதி [அற்லஸ்] ஆகிய பாட நூல்களின் புதிய பதிப்புகள் வெளிவந்துள்ளன. ஆக்கம்: க. குணராஜா (எம்.ஏ). எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [22309]

## பரீட்சை (ஆண்டு - 4)

ஆண்டு-4 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் முன்னோடிப் பரீட்சை [தமிழ், கணிதம், ஆங்கிலம்] 30-08-92 ஞாயிறு மு.ப. 8-00, மு.ப. 11-00 ஆகிய நேரங்களில் நடைபெறும்: வெளி மாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [22304]

## தவறிவிட்டது

26-08-1992 அன்று மருதடி வேனுக்கும், யாழ். பல்கலைக் கழகத்திற்கும் இடையில் 673420184V இலக்க தேசிய அடையாள அட்டை, யாழ். பல்கலைக்கழக அடையாள அட்டை அடங்கிய பேர்ஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இல. 28, றக்கா லேன், சுண்டிக்குளி என்ற விலாசத்திற்கு அறிவிக்கவும். [22326]

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

12-08-92 அன்று மாலை 6 மணி அளவில் கொக்குவில் கோவில் வீதியில் தங்க அட்சரக்கூடு ஒன்று கண்டெடுக்கப்பட்டு, உடுவில் தெற்கு சித்தி விநாயகர் ஆலய நிர்வாக சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளவும். [22320]

---

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

# பழைய மாணவர் சங்கம் வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம்:- கல்லூரி விளையாட்டு மைதானம்

காலம்:- 30-08-1992 ஞாயிற்றுக்கிழமை - பி. ப. 2 மணி

தலைவர்:-

பேராசிரியர் திரு. அ. துரைராசா

கல்லூரியின் பழைய மாணவர்களைத் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் அன்பாக வேண்டுகின்றோம்.

சி. கனகசபாபதி,
செயலாளர்.

[5278]

---

# NEW SCIENCE ACADEMY

JAFFNA.

## A/L 93 DAY CLASSES

(ஒரு வருட வகுப்பு)

| | |
|---|---|
| PHYSICS | — கணேசன் |
| CHEMISTRY | — சண் |
| BOTANY | — குணசீலன் |
| ZOOLOGY | — பிரபல ஆசிரியர் |
| PURE/APP. MATHS | — வெக்டர் |

ஆரம்பம்: 01 - 09 - 1992

செவ்வாய் காலை 8-00 மணி

[சி-3165]

---

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| ஜனனம்: | இறப்பு: |
|---|---|
| 07 | 29 |
| 07 | 08 |
| 1974 | 1990 |

## அமரர் ஜேம்ஸ் ஜெறின்

(சென் சாள்ஸ் மகா வித்தியாலய மாணவன்)

"கடவுள் தனக்குப் பிரியமானவர்களை
இளமையிலேயே அழைத்துக் கொள்கிறார்."

ஜெறினின் ஆத்ம சாந்திக்காக நாளை 29-08-92 காலை 6-00 மணிக்கு கொழும்புத்துறை செபமாலை மாதா தேவாலயத்தில் திருப்பலி பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

தாய், பெரியதாய், சிறிய தந்தை,
சகோதரர்கள்,
அண்ணிமார், பெறாமக்கள்.

ஜே. அன்ரன் றெஜினோல்ட்,
தே வீ அ அ. சபை,
யாழ்ப்பாணம்.

"லில்லி ஜேம்ஸ்",
268, 7ஆம் குறுக்குத்தெரு,
மணிப்புரி,

[22293]

---

A/L பரீட்சை எழுதிய மாணவர்களதும் ஏனையோரதும் வேண்டுகோளுக்கிணங்க

# எழுதுவினைஞர் போட்டி

பரீட்சைக்கான

## ★ விசேட பயிற்சி வகுப்புகள் ★

3ஆவது பிரிவு: ஆரம்பம்: 01-09-1992 பிற்பகல் 2மணி

பாடநெறி: மொழித்தேர்ச்சி, பொதுவிவேகம்.

★ செவ்வாய், புதன், வியாழன் — பிற்பகல் 2 — 5மணிவரை
★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ முழுப் பயிற்சிக்கும் — கட்டணம் ரூபா 300/- மட்டுமே.

**ASTAN INSTITUTE**

101/10, STANLEY ROAD, JAFFNA.

[மக்கள் வங்கிக்கு அருகாமையில்]

(சி-3167)

---

# கெயர் ஸ்தாபனம் உதவி

முறிகண்டி, ஆக. 28 வடபகுதியைச் சேர்ந்த 18 ஆயிரத்து 500 விவசாயிகளுக்கு விவசாய முயற்சிகளுக்கென அகில உலக கெயர் ஸ்தாபனம் இவ்வருடமும் நிதியுதவி வழங்கவுள்ளது.

கடந்த வருடம் இந்த ஸ்தாபனம் 120 மில்லியன் ரூபா பெறுமதியான உதவிகளை வழங்கியது. இதனைக் கொண்டு இப்பகுதி மக்கள் சிறப்பாக விவசாய முயற்சிகளை மேற்கொண்டதனால் இவ்வருடமும் நிதியுதவி வழங்க மேற்படி நிறுவனம் முன்வந்துள்ளது. (த-சி)

---

# English Teachers' Selection

EXAMINATION - Sept. - 1992

★ துரித கற்கை நெறி

ஆரம்பம்: 31-08-1992

திங்கள் மு. ப. 10 மணி

ஆசிரியர்கள்:

K. சபாநாயகம்
T. N. பஞ்சாட்சரம்

**New Science Academy,**

கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

(சி-3163)

---

# 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கணபதிப்பிள்ளை நடேசர்

தோற்றம்: 26 — 10 — 1913

மறைவு: 05 — 08 — 1986

திதி: 28 — 08 — 1992

எங்கள் அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் ஆறு ஓடி மறைந்தாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்கள்
உள்ளங்களில் இருந்து நீங்காது அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி பெற, எமது
கண்ணீர்ப் பூக்களை காணிக்கையாக்குகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

[5273]

---

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 06 — 11 — 1917

விண்ணில்: 28 — 08 — 1990

அமரர்

## ஜேம்ஸ் கிறிஸ்ரடாஸ் தம்பிராஜா

"அன்பினால் எம்மை நீயும்
அகம் தனில் பதிய வைத்தாய்
என்பெலாம் உருகுதையோ
பிரிவெனும் துயரத்தாலே."

அன்புடன் நினைவு கூரும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

பிரதான வீதி,
வட்டுக்கோட்டை.

[22287]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தமிழர் கைக்குக் கிடையாதே!

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மாகாண விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கென, ஆசிய அபிவிருத்தி வங்கி 52 கோடியே 50 லட்சம் ரூபாவை ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கு வழங்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இப்பணத்தை ஆசிய அபிவிருத்திவங்கி விசேட நிதிஉதவியாக வழங்கியிருப்பதாக விவசாயத்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

வெளிநாட்டு அரசாங்கங்களும், சர்வதேச நிதி நிறுவனங்களும் வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கென வழங்கும் நிதி உதவிகள் மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான உதவிகள் தமிழ்ப் பகுதிகளுக்கு உரியவாறு முழு அளவில் வந்து சேர்வதில்லை என்பது ஏற்கனவே தெரிந்த விடயம்.

விவசாயம், கைத்தொழில், மீன்பிடி ஆகிய முக்கியதொழில் துறைகளுக்கும் போக்குவரத்து, தொலைத் தொடர்பு போன்ற அபிவிருத்தித் துறைகளுக்கும் அரசாங்கம் தனது பணத்தில் ஒதுக்கும் நிதிகள் வடக்கு - கிழக்குக்குச் செலவு செய்யப்படுவதில்லை.

அதேபோலவே வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் நிதிகளும் வடக்கு-கிழக்கின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படுவதில்லை. 1983 ஆம் ஆண்டின் பின்னர் உலக வங்கி, யுனிசெவ் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் வழங்கிய உதவிகள் தமிழ்ப் பகுதிகளுக்குச் சேரவில்லை. தமிழ்ப் பகுதிகளுக்கென விசேடமாகக்குறிப்பிட்டு வழங்கப்படும் உதவிகள் கூட, ஒன்றில் தென் பகுதிக்குச் செலவிடப்படும். இல்லையேல் செலவிடப்படாமல் வேறு கணக்கில் வைக்கப்படும்.

இதுவே ஸ்ரீலங்கா அரசின் நீண்ட கால நடைமுறையாக இருந்து வருகிறது.

வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி வேலைகளைச் செய்வது என்ற பேச்சுக்கே இடமில்லாமல் அவை முற்றாகப் புறக்கணிக்கப்படுகின்றன. அதாவது மருந்துக்கும் இல்லை என்று சொல்லுமளவுக்கு தமிழ்ப் பகுதிகளில் அபிவிருத்தி வேலைகள் அருகிப்போய்விட்டன.

யுத்தம் தொடங்கிய கடந்த இரண்டேகால் வருடங்களில் வடக்கு-கிழக்கில் அபிவிருத்தி வேலைகள் அறவே இல்லை என்பது ஒருபுறமிருக்க அழிப்பு வேலைகள் அசுர வேகத்தில் நடந்து வருகின்றன. தெற்கில் வீடுகள் புதிது புதிதாகக் கட்டப்படும் வேளை, தமிழ்ப்பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான வீடுகள் அழிக்கப்பட்டும் சேதமாக்கப்பட்டும் வருகின்றன. தெற்கில் மாதாந்தம் புதிய தொழிற்சாலைகள் திறக்கப்படும் போது வடக்கு-கிழக்கில் தொழில் நிலையங்கள் குண்டு வீசித் தகர்க்கப்படுகின்றன. தென்னிலங்கையில் விவசாயம் அபிவிருத்தி செய்யப்பட்டு விளைச்சல்கள் அதிகரிக்கும் வேளை, தமிழ்ப்பகுதியின் விவசாய நிலங்கள் நாசமாக்கப்படுகின்றன; விவசாயிகள் விரட்டப்படுகின்றனர் அல்லது இடம்பெயரச் செய்யப்படுகின்றனர்.

நிலைமை இவ்வாறிருக்கையில் வடக்கு-கிழக்கு விவசாயிகளுக்குக் கடன் வழங்குவதற்கென கொடுக்கப்பட்ட பணம் தமிழ் விவசாயிகளின் கைக்குக் கிடைப்பது சாத்தியமாகுமா? அந்த நிதி பாதுகாப்புச் செலவுக்குள் அடக்கப்பட்டு தமிழ் விவசாயிகளைக் கொல்லவும், தமிழர் விவசாயத்தைச்சீரழிக்கவுமே பயன்படுத்தப்படும். ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு இது தெரியாதா?

# அகதி முகாம்களில் அவலங்கள் பல!

# ஒரு வாரம் ஒரு வருடம் போலானது!!

காலையும், இரவும் பாண் தருகிறார்கள். பகல் வேளைக்குச் சோறு தருகிறார்கள். ஆறு பேரைக் கொண்ட எனது குடும்பத்திற்கு இந்த உணவு போதாது. வயது வந்த பிள்ளையும், கணவரும், நானும் அரை வயிற்றுக்குச் சாப்பிட்டு விட்டு, சிறு பிள்ளைகளின் பசியைப் போக்குகிறோம். சில வேளைகளில் நாம் சாப்பிடாமலே சிறு பிள்ளைகளின் பசியைப் போக்க வேண்டி உள்ளது.

இவ்வாறு தெரிவித்தார் இளவாலையைச் சேர்ந்த குடும்பப் பெண்ணான துரைசிங்கம் செல்லம்மா. இவர் மானிப்பாய் அந்தோனியார் தேவாலய அகதி முகாமில் தங்கியிருக்கிறார்.

கடந்த 20, 21ஆம் திகதிகளில் நடந்த இராணுவத் தாக்குதல்களால் பாதிப்புற்று மானிப்பாய் பகுதியில் தங்கியுள்ள இவரைப் போன்ற மற்றும் பல அகதிகள் இதே வகையான தமது கஷ்டங்களைத் தெரிவித்தனர்.

கடந்த வாரத்தில் அளவெட்டி, விளான், இளவாலை, மாரீசன்கூடல், மாதகல் ஆகிய பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தவர்களில் பலர் மானிப்பாய் பகுதியிலேயே தஞ்சம் புகுந்துள்ளனர்.

அங்குள்ள பல அகதி முகாம்களுக்கு நிலைமையை நேரில் கண்டறியச் சென்றபோதே திருமதி துரைசிங்கத்தின் நிலைமை அறிய முடிந்தது.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் மொத்தம் பதினேழு அகதி முகாம்கள் உள்ளன. அவை அனேகமாக மானிப்பாய் பகுதியிலேயே அமைந்துள்ளன.

மானிப்பாய் அந்தோனியார் ஆலயத்தில் அமைந்துள்ள முகாமில் ஐநூறுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கியுள்ளன. அவர்களில் பலரிடமும் அவர்களது கஷ்டங்கள் பற்றிக் கேட்டறிந்தோம்:

#### ஒரு கிழமை ஒரு வருடம்

"உயிரைக்காக்க வேண்டும் என்று இடம்பெயர்ந்து இங்கு வந்து சேர்ந்த எமக்கு ஏற்பட்டுள்ள அவலத்தைப் பாருங்கோ. ஒரு கிழமை ஒரு வருடமாகத் தெரிகிறது. இன்னும் எத்தனை காலத்துக்கு இப்படி நரக வாழ்க்கை வாழ்வது?"— என்று பெண்கள் பலரும் அழுதவாறு கேட்டார்கள்.

மரநிழல்களில் சேலைகளை மறைவிடமாக்கி, பாய் கூட இல்லாது, வெறும் மண்ணில் படுக்க வேண்டிய நிலை. மலசலகூட வசதியில்லை. ஒரு மைல், இரு மைல்கள் நடந்து பனங்கூடலையோ, வயல்கரைகளையோ விடிவதற்கு முன் நாடி காலைக் கடனைக் கழிக்க வேண்டிய அவலநிலை— என்றார் ஒரு பெண்.

அரைகுறைச் சாப்பாடு கிடைப்பதேனும் பெரும் உதவி. வேறு உணவுப் பொருள்களை வாங்குவதற்கு எங்களிடம் கையில் பணம் எதுவும் இல்லை. பலர் உடுத்த உடுப்புடன் வெறுங்கையுடன் வந்திருக்கின்றோம். — இப்படி எத்தனை நாட்களைப் போக்க முடியும் என்று அங்கலாய்த்தார் சின்னத்தம்பி சுப்பிரமணியம் என்ற 55 வயது நபர், இவர் தோட்ட வேலை செய்து அன்றாடம் உழைத்து வாழ்ந்தவர்.

மானிப்பாய் இந்துக்கல்லூரி.

வேண்டியுள்ளதால் வாரி இறைக்கும் புளுதி மண்ணால் இருமல், நெஞ்சு நோ ஏற்படுவதாகக் கூறி வருத்தப்பட்டார் மாரீசன் கூடலைச் சேர்ந்த 70 வயதான ஒருவர்.

முகாம்களுக்குப் போதிய விளக்குகள் வழங்கப்படாததால், வெளித் தரைகளில் பாம்பு, பூச்சி பயத்துடன் நித்திரையின்றி காலத்தை கழிப்பதாக வயோதிபப்பெண் ஒருவர் தெரிவித்தார்.

கட்டுடை சைவவித்தியாசாலையில் 92 குடும்பங்கள் தங்கியுள்ளன.

#### வயல் வரம்பும் படுக்கையாகிறது

வயல்கரையில் அமைந்துள்ள இந்த முகாமில் உள்ளவர்கள் இடநெருக்கடி காரண

துண்டுகளாக வெட்டப்பட்டு ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது:

#### பொது அமைப்புகள் உதவுகின்றன

சண்டிலிப்பாய், சங்கானைப் பகுதிகளில் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தங்கியுள்ள அகதிகளுக்கு தொண்டர் நிறுவனங்கள் வழங்கும் உதவியுடன் சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், ஆலய பரிபாலன சபையினர் மற்றும் பொதுமக்களும் உணவுப் பொருள்களையும், உடுபுடவைகளையும், மரக்கறி வகைகளையும் வழங்கி வருகின்றனர். சில முகாம்களுக்கு பொதுமக்கள் சமைத்த உணவுப் பொதிகளை வழங்கி வருகிறார்கள். பெரும்பான்மை

### மரநிழல் பலருக்குத் தஞ்சம்; வயல் வரம்பு படுக்கையாகிறது

மாக வயல் வரம்புகளில் படுக்க வேண்டியுள்ளதாகத் தெரிவித்தனர்.

குழந்தை குட்டிகளுடன் இந்த வரம்புகளில், பாய் கூட இல்லாமல் படுக்க வேண்டிய அவலநிலை என்று கூறி அழுதார் விளானிலிருந்து இடம் பெயர்ந்து வந்த குடும்பப் பெண் ஒருவர்.

சண்டிலிப்பாய், சங்கானைப் பகுதிகளில் உள்ள ஆலயங்கள், பாடசாலை சுற்றாடல்களில் எங்கு பார்த்தாலும், அகதிகள் தங்கியுள்ளதைக் காண முடிகிறது.

பல இடங்களில் ஆலயங்களைச் சுற்றியுள்ள மரங்கள் அகதிகளுக்கு தஞ்சம் அளித்துள்ளன. மரங்களின் கீழ் சிறு சிறு இடங்களைத் தமக்கென வகுத்து துணிகளை சுற்றி வீடமைத்து, மரங்களைக் கூரையாக்கி அகதிகள் வாழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

#### மாற்றுடை இல்லை

அனேகர் உடுப்புகளைக் கூட விட்டுவிட்டு வந்ததால் மாற்று உடை இன்றி அல்லல்படுகின்றனர். குழந்தைகள் அரைகுறை உடுப்புகளுடன் மண்ணில் கிடந்து புரளுவதைக் காணக்கூடிய

யான முகாம்களில் தங்கியுள்ள மக்கள் நிவாரணப் பொருள்களைப் பெற்று சமைத்து சாப்பிட விரும்புகின்றனர். ஆனால் அவர்களிடம் சமையல் பாத்திரங்கள் இல்லை.

இடம்பெயர்ந்த எமக்கு இந்தளவு உதவி தானா? எமக்கும் இப்படி ஒரு வாழ்க்கையா — என்ற பலரது பெருமூச்சுகள் காதை நிறைக்க ஒவ்வொரு முகாமையும் விட்டு வரவேண்டியதாயிற்று. ஆனால் ஒரே ஒரு முகாமில் மட்டும் தங்களுக்குக் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு எந்தக் குறைபாடும் இல்லை என்று அங்கிருந்த மக்கள் கூறியதையும் சொல்லித்தானாக வேண்டும். ★

### பெரிய குடும்பங்கள் அரைப் பட்டினியுடன்

உயிரையாவது காத்திடுவோம் என்ற எண்ணத்துடன் இடம்பெயர்ந்து இங்கு வந்து சேர்ந்த எமக்கு ஏற்பட்டுள்ள அவலத்தைக் கவனிப்பார் இல்லையா?— என்று அகதிகள் ஒவ்வொருவரும் கேட்கும் அளவுக்கு—

இராணுவத் தாக்குதல் நடந்து ஒருவாரம் கழிந்த பின்னரும் (புதன்கிழமை அன்று) இடம்பெயர்ந்தோர் நிலை மிகவும் பரிதாபத்துக்கு உரியதாக இருந்தது.

மக்கள் இருப்பிட வசதி இன்றி மரநிழல்களின் கீழ் சேலைகளால் மறைப்புக் கட்டி மண்ணில் படுத்திருப்பது ஒருவகைச் சோகக் காட்சி.

மலசலகூட மற்றும் குடிதண்ணீர் வசதிகள் போதியளவு இல்லாமல் நோய்களை கேட்டு வாங்கிக் கொண்டிருக்கும் கூட்டத்தினராகவும் இடம்பெயர்ந்த மக்கள் மாறிவிட்டனர். சூழ்நிலை இப்படி இவர்களை மாற்றி விட்டதே என்று கவலை அடைவதை விட வேறு எதுவும் தோன்றவில்லை.

மாற்றுடையின்றி வந்ததால் குளிக்க முடியாமல் சுகாதாரக் கேட்டைத் தேடிக் கொள்ளும் நிலையும் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

சில முகாம்களில் வயல் வரம்புகளில் கூட மக்கள் இரவு நேரங்களில் படுத்து உறங்குகின்றனர்.

மானிப்பாய் பகுதி அகதி முகாம்களுக்கு நேரில் சென்று பார்த்ததில் கண்ட, கேட்ட அவலங்கள் மிகப் பல.

இடம்பெயர்ந்தவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் உருவாக்கப்பட்ட முகாம்களிலேயே வாழ்

மானிப்பாய் மகளிர் கல்லூரி முகாம்களுக்குச் சென்றபோதும் முன் கண்டது போன்ற அவலங்களையே பலரிடமிருந்தும் திரும்பவும் கேட்க முடிந்தது.

சாப்பாடுதான் போதாதென்றால் நிம்மதியாக படுக்கக்கூட இடமில்லையே என்று அங்கலாய்த்தார் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் தங்கியுள்ள பெண் ஒருவர். அவரும் இளவாலையைச் சேர்ந்தவரே.

#### சுடுபுளுதியே படுக்கை

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் மொத்தம் மூவாயிரம் பேர் கல்லூரி கட்டடங்களில் தங்கியுள்ளனர். மேலும் ஐநூறுக்கும் மேற்பட்டவர்கள் கல்லூரி விளையாட்டரங்கில் சேலைகளைச் சுற்றி மறைவிடமாக்கி அந்தக் கூடுகளுக்குள் சுடுபுளுதி மண்ணில் தங்கியுள்ளனர்.

கண்நோய், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் அந்த முகாமில் பரவத் தொடங்கி விட்டன. அவற்றுக்கு போதிய மருந்துகள் இன்றி அகதிகள் கஷ்டப்படுகின்றனர்.

போதியவிறகு இல்லாததால் சோறு அரைகுறை அவிசிப் பதத்திலேயே வடிக்கப்படுகிறது. அவற்றை குழந்தைகளுக்கு கொடுப்பதால் வயிற்றோட்டம் ஏற்படுகிறது. குழந்தைகளுக்குப் பால் மா இல்லை. அதனால் அரைகுறை வெந்த சோற்றையே பிள்ளைகளுக்குக் கொடுக்கிறோம் — என்றார் மாதகலைச் சேர்ந்த பராசக்தி என்ற இளம் குடும்பப் பெண் இவர் மானிப்பாய் மகளிர் கல்லூரி முகாமில் தங்கியிருக்கிறார்.

வெளியீட்டினில் ...

பார்த்து எழுதியவர்
"தகவல் காவி"

தாக இருந்தது.

அகதிகள் தங்கியிருக்கும் முகாம்களை நிர்வகிக்கும் தொண்டர் நிறுவனங்களால் எட்டுப்பேருக்கு ஒரு கிலோ என்ற வீதத்தில் ஒரு வேளைக்கு அரிசியும், மரக்கறிகளும் முகாம்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒருஇறாத்தல் (750 கிராம்) பாண் மூன்று

### உற்சவங்கள்

சாவகச்சேரி கல்வயல் பழந்தோட்ட வைரவர் ஆலய மகா கும்பாபிசேகம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது. (இ-117)

★ ★ ★

வடமராட்சி கிழக்கு குடாரப்பு முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (த-117)


### நினைவுப் பேருரை

சந்தான குரவராகிய மறைஞானி சம்பந்த சிவாசாரியார் நினைவுப் பேருரை நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில் நடைபெறும்.

முதறிஞர் க. சி. குலரத்தினம் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

மெய்கண்டதேவர் சைவ சித்தாந்த உயர் நிறுவனம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. (இ)

உ



### உந்தனையே சரணடைந்தோம்!

கந்தனே கரங்குவித்தோம் காப்பாய் இது தருணமையா!
சிந்தனை செய்தே தினம் சிரந் தாழ்த்தி -
வணங்குகின்றோம்
வந்தனை செய்தே நிதம் வரங்கேட்டு வழுத்தி நிற்போம்
உந்தனையே சரணடைந்தோம் உயிர்காக்க -
வேண்டுமையா!

- இராசையா ஸ்ரீதரன்.

### உன் வேலை ஈந்தருள்வாய்!

தமிழீழமண் தம்மைப் பெறவே நிதம்
தமிழீழ மக்கள் உன்திருவடி தாங்குகிறார்
தமிழீழ நல்லூர்க் கந்தாயுன் வேலை,
தமிழீழ புலிப் படைக் கீந்தருள்வாய்;

- சிவம் பரமநாதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றரை லட்சம் அகதிகளை சுவிஸ் திருப்பி அனுப்ப முடிவு

## பிரட்மன் இப்படிக் கூறுகிறார்

கொழும்பு, ஆக. 28

சுவிஸ் அரசு அந்நாட்டிலுள்ள ஒரு லட்சத்து 50 ஆயிரம் இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்ப முடிவு செய்திருப்பதாக ஜனாதிபதியின் வெளியுறவு ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் நேற்றுத் தெரிவித்தார்.

கொள்ளுப்பிட்டி கிராமோதய மண்டபத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் இத்தகவலைத் தெரிவித்தார்.

சுவிஸ் அரசு ஒரு லட்சத்து 50 ஆயிரம் அகதிகளையும் அடுத்த 5 ஆண்டுகளில் கட்டம் கட்டமாகத் திருப்பி அனுப்ப முடிவு செய்துள்ளது.

கடந்த மாதம் இங்கு விஜயம் செய்த அதிகாரிகள் குழு இங்கு அகதிகள் திரும்பி வரக்கூடிய சூழ்நிலை நிலவுகிறது என்பதில் திருப்தி தெரிவித்திருந்தது என்று அவர் மேலும் கூறினார். (ஒ-10)

ஈழ அகதிகள் விவகாரம்:

# இடைக்கால தடைக்கெதிராக தமிழக அரசு மனு தாக்கல்?

தமிழ் நாட்டில் இருந்து இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கு இடைக்காலத் தடை விதித்து சென்னை நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு எதிராக—

தமிழக அரசு மனுத்தாக்கல் செய்ய உத்தேசித்திருப்பதாக அறியவருகிறது.

இது தொடர்பாக தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருவதாக புனர் வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சின் செயலாளர் கிறிஸ்ரி சில்வா நேற்று கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (ஒ-10)

# பாதுகாப்புப் பிரதேசத்தில் இனி தாக்குதல் நடக்காது

## பிரிகேடியர் தலுவத்த உறுதி

யாழ்ப்பாணம் ஆக. 28

யாழ். ஆஸ்பத்திரியின் சூழவுள்ள தாக்குதலற்ற பாதுகாப்புப் பிரதேசமாக இணக்கம் காணப்பட்ட பகுதியில், இனிமேல் தாக்குதல் எதுவும் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ் மாவட்ட இராணுவ தளபதி பிரிகேடியர் தலுவத்த மேற்கண்டவாறு உறுதி கூறியுள்ளார்.

பலாலியில் தம்மைச் சந்தித்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு யாழ் வதிவிடப் பிரதிநிதியிடம் மேற்கண்ட உறுதியை பிரிகேடியர் தெரிவித்தார்.

தாக்குதலற்ற பாதுகாப்புப் பிரதேசமாக இணக்கம் காணப்பட்ட யாழ். ஆஸ்பத்திரிப் பகுதியில் படையினரின் தாக்குதல்கள் சில சமயங்களில் இடம் பெற்றுள்ளன என்றும் செஞ்சிலுவைப் பிரதிநிதி, பிரிகேடியரிடம் சுட்டிக்காட்டினார். (ஒ-3)

**மாதகல்...**

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இராணுவத்தினர் உயிரிழந்தனர். மற்றும் நான்கு பேர் காயமடைந்தனர் என்று கொழும்பில் கூட்டுப்படைத் தலைமையகப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார். [ஒ-எ-15-5-3]


நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

"யாழோசை" மன்றம்

வழங்கும்

"நிவேதனம்" இசைநிகழ்ச்சி

(யாழோசைக் குழுவினருடன் யாழ். முன்னணி இளம் கலைஞர்கள் இணைந்து வழங்கும் நிகழ்ச்சி)

இன்று மாலை 6. 35 மணிக்கு

நல்லூர் சுற்றாடலில்

அனைவரும் திரண்டு வருக

[சி/3095]


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் தெய்வேந்திரம்

ஆனைக்கோட்டை ஆறுகால்மடம் புது வீதியைச் சேர்ந்த வை. தெய்வேந்திரம் 27-08-92ல் காலமானார். இவர் கமலாவதியின் அன்புக் கணவரும், நகுலேஸ்வரனின் அன்புத் தந்தையும், நித்தியகௌரியின் அன்பு மாமனாரும், ஜெயகாந்தன், ஜெயதாரணி, ஜெயதர்ஷன், ஜெயபிரதா ஆகியோரின் ஆசை மிகு பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 28-08-92 வெள்ளிக்கிழமை இன்று அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பி. ப. 1 00 மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
தெ நகுலேஸ்வரன்
(மகன்)

"அன்னை இல்லம்"
புது வீதி.
ஆனைக்கோட்டை.

[5283]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 28-08-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

அண்மையில் இடம் பெயர்ந்தவர்களுக்கென

# 1,300 தற்காலிக குடிசைகள் உடனடியாக அமைக்க முடிவு

யாழ்ப்பாணம், ஆக. 28

யாழ் மாவட்டத்தில் அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையால் இடம் பெயர்ந்தவர்கள் தங்க ஆயிரத்து 300 தற்காலிக குடிசைகள் அமைக்கப்படவிருக்கின்றன.

தென்மராட்சிப் பகுதியில் ஆயிரம் குடிசைகளும், சண்டிலிப்பாய் பகுதியில் 300 குடிசைகளும் அமைக்கப்படும்.

தென்மராட்சியில் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை 500 குடிசைகளையும். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 500 குடிசைகளையும்—

சண்டிலிப்பாய் பகுதியில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும், மோரூட் நிறுவனமும் 300 குடிசைகளையும் அமைக்க உள்ளன.

இந்தக் குடிசைகள் அமைப்பதற்கான நிதியை யாழ். அரச அதிபர் வழங்குவார்.

முதல் கட்டமாக, வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து தெல்லிப்பழை, மல்லாகம் பகுதிகளில் தற்காலிககுடிசைகளில் தங்கியிருந்து மீண்டும் அகதிகளாகியுள்ள ஆயிரம் குடும்பங்கள் உடனடியாக தென்மராட்சியில் குடியேற்றப்படவிருக்கின்றன என்றும்—

சண்டிலிப்பாய் பகுதியில் அமையவிருக்கும் குடிசைகளில் மாதகல், இளவாலைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் குடியேற்றப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

# அதிபர் பதவி: செப் 4 க்கு முன் விண்ணப்பிக்க வேண்டும்

அதிபர் சேவை 1, 2, 3 ஆம் தரங்களுக்குப் பதவி உயர்வு வழங்குவதற்கான இவ்வருடத்திற்குரிய பரீட்சை எதிர்வரும் அக்டோபர் மாதம் மூன்றாம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பிப்போர், செப்டம்பர் 4 ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் மனுக்களை அனுப்ப வேண்டும் என்று கல்விச் சேவைச் சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இப்பரீட்சைக்கு விண்ணப்பம் செய்வதற்குரிய நிபந்தனைகள், பாடத்திட்டங்கள் மற்றும் விபரங்கள் 14-8-1992 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியாகியுள்ளன.

# கல்வி வளர்ச்சி கழகம் இன்று அங்குராப்பணம்

யாழ்ப்பாணம், ஆக. 28

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மருதனார்மடக் கோட்டப் பிரிவின் கோப்பாய் கொத்தணியில் கல்வி வளர்ச்சிக் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது

மேற்படி கழகத்தின் ஆரம்ப விழா இன்று வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் தெற்கு கந்தவேள் வித்தியாசாலையில் நடைபெறும்

ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 8 வரை கல்வி கற்கும் மாணவர்கள் இன்று ஆரம்பிக்கப்படும் கல்வி வளர்ச்சிக் கழகத்தில் இணைந்து பயன்பெறலாம் என விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் மருதனார்மட கல்விக் கோட்ட பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-5)

# பண்டத்தரிப்பு, அளவெட்டி தபாலகங்கள் இடம் மாற்றம்

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்த மக்களின் வசதிக்காக பண்டத்தரிப்பு தபால் நிலையம் சங்கானை தபால் நிலையக் கட்டடத்திலும்—

அளவெட்டி தபால் நிலையம் மானிப்பாய் தபால் நிலையக் கட்டடத்திலும் — இயங்க வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் தங்கள் கடிதங்களை மேற்படி நிலையங்களில் நேரடியாகச் சென்று பெற்றுக் கொள்ளலாமென யாழ். பெரும்பாக அஞ்சல் அத்தியட்சகர் திரு க. இராசேந்திரம் அறிவித்துள்ளார்.

# கைப்பணி ஆசிரியர்கள் நியமிக்க ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 28

பாடசாலைகளில் கைப்பணி ஆசிரியர்களை நியமிப்பதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. மாகாண அரசாங்க சேவை மூலம் நியமனங்கள் வழங்கப்படும். மாதமொன்றுக்கு ஆயிரத்து 380 ரூபா திரட்டிய சம்பளம் வழங்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி. சி. ஈ. சாதாரண தர பரீட்சையில் கைப்பணிப் பாடம் ஒன்றில் விசேட சித்தி பெற்றதோடு தொழில் நுட்பக் கல்லூரியினால் அல்லது அரசாங்கத் திணைக்களம் ஒன்றினால் நடத்தப்பட்ட கைப்பணி பயிற்சி நெறியில் சித்தி அடைந்தவர்கள் இப்பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மரவேலை, உலோக வேலை, நெசவுத் தொழில், வனைதல் தொழில், மோட்டார்ப் பொறி நுட்பவியல், வானொலி தொழில் நுட்பவியல் மேசன் வேலை ஆகிய துறைகளுக்கு ஆசிரியர் நியமிக்கப்படுவர்.

விண்ணப்பங்களை இம்மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும் எனக் கல்விச் சேவைச் சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.

விபரங்கள் 14-08 92 ஆம் திகதிய வர்த்தமானியில் வெளியாகி உள்ளன.

குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலை இலக்கம் 15 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள உதயன் விளம்பரப் பணிமனையிலும் 84, கே. கே. எஸ். வீதி கன்னாகத்தில் உள்ள உதயன் சேவை நிலையத்திலும் இன்று காலை 10-00 மணிக்குப் பின்னர் பார்வையிடலாம். [ஆ]

# நாளை இறுதியாட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 28

அமரர் ஆலாலசுந்தரம் ஞாபகார்த்தமாக அரியாலை மத்திய விளையாட்டுக்கழகம் நடத்தும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் நாளை காலை 9 மணிக்கு கழக மைதானத்தில் ஆரம்பமாகும்.

ஐம்பது மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஷப்றா அணியை எதிர்த்து அரியாலை மஞ்சள் அணி மோதும். (உ)

**தம்பலகமத்தின்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உதவி அரச அதிபர் பிரிவு ஒன்றை அமைக்குமாறு முஸ்லிம்களினால் அரசிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டது [ஒ-5]

**புலிகள்....**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணையை இம் மாதம் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைத்திருந்தார்.

25 ஆம் திகதி நீதிமன்றம் மீண்டும் கூடியபோது விடுதலைப் புலிகள் சார்பாக சட்டத்தரணிகள் எவரும் ஆஜராகவில்லை.

இதனை அடுத்தே விசாரணை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

தினகரின் மனுவை அடுத்து விடுதலைப் புலிகளைத் தடை செய்து இந்திய அரசு வெளியிட்ட பிரகடனத்தை அமுல் செய்வதை ஒத்திவைக்குமாறு [illegible] விட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [இ]

# சமய அறிவுப் போட்டிகளின் பரிசளிப்புகள்

கொழும்புத்துறை, ஆக. 28

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த உற்சவத்தினையொட்டி யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தினால் நடாத்தப்பட்ட சைவ சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழா நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

நாளை பி. ப. 2 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் தலைமையில் பரிசளிப்பு விழா நடைபெறும்.

★ ★ ★

தமிழ் மாமன்றம் நடாத்திய சமய அறிவுப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் நாளை நடைபெறுகிறது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன கலாமண்டபத்தில் மன்றக் காப்பாளர் இருவை கவிஞர் திரு. க. ஜீவமோகன் தலைமையில் பி. ப. 4.30 மணிக்கு பரிசளிப்பு விழா நிகழும். [அ-31]

# மஞ்சள் காமாலை பற்றிய கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஆக. 28

மஞ்சள் காமாலை பற்றிய கருத்தரங்கு எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 30 மணிக்கு யாழ்ப்பாணம் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும்.

சுவாமி ஸ்ரீ சிதானந்த சரஸ்வதி அவர்களும், பல யோகாசன நிபுணர்களும், இக்கருத்தரங்கில் கலந்து கொண்டு, உரை நிகழ்த்துவதோடு, யோகாசனச் செய்முறைப் பயிற்சியும் செய்து காண்பிப்பார்கள்.

அகில இலங்கை சர்வமத யோகாசன ஸ்தாபனம் இதனை ஏற்பாடு செய்துள்ளது. [ஓ]

**பொதுமக்கள்...**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பட்டது.

அத்துடன் யாழ் மாவட்ட அகதிகள் நிலை, அவர்களுக்கான உணவு மற்றும் வசதிகள் போன்ற விடயங்களையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரி பிரிகேடியருக்கு விளக்கினார். (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org